செ. கு. எண்:038 நாள்: 06.04.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 6.4.2017

திருவள்ளூர் மாவட்டம், கசவநல்லாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு ராஜா என்பவரின் மனைவி திருமதி. சரசு;

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வடக்குபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணபதி என்பவரின் மகன் திரு பெருமாள்;

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மன்னார்நாயுடு என்பவரின் மகன் திரு. செல்வம்;

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அரியாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடேசன் என்பவரின் தாயார் திருமதி செல்லம்மாள் மற்றும் வந்தவாசி வட்டம், வெடால் கிராமத்தைச் சேர்ந்த திரு எல்லப்பன் என்பவரின் மகன் திரு சுப்பிரமணி;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கல்லகம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரியசாமி என்பவரின் மகன் திரு. சங்கர்;

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், ஜமீன் பேரையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு செங்கமுத்து என்பவரின் மகன் திரு தங்கராசு;

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கோணசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு ஜெய்சங்கர்;

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், முடினாம்பட்டு காலனியைச் சேர்ந்த திரு. துரை என்பவரின் மனைவி திருமதி மாரிமுத்து;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், ஆரம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலு என்பவரின் மகன் திரு. குமரவேல் மற்றும்

உத்திரமேரூர் வட்டம், பெருநகர் ஆ கிராமத்தைச் சேர்ந்த திரு கரியன் என்பவரின் மகன் திரு. அண்ணாமலை இவருடைய மனைவி திருமதி சோழியம்மாள் ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த மேற்கண்ட 12 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**